REG No. M 2997.

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர்.
ச. கந்தையபிள்ளை

LeRédacteur
S. CANDIAH PILLAI

VITTAGAM

ம
நந்திபதி
கோல்

# வித்தகம்

ஒரு செந்தமிழ் வாரப் பத்திரிகை.

VOL. III | புதுவை, தாது ஸு புரட்டாசி மீ ௨ ௨ (17—9—36) | No. 40,41.

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

மையினார்மலர்நெடுங்கண்மலைமகளோர்பாசமா
மெய்யினான்பையரவமரைக்கசைத்தான்மீன்பிரழச்
செய்யினார்தண்கழனிச்செங்காட்டங்குடியதனுட்
கையினார்கூரெரியான்கணபதீச்சரத்தானே.

தோடுடையான்குழையுடையானரக்கன்றன்றோளடர்த்த
பீடுடையான்போர்விடையான்பெண்பாகமிகப்பெரியான்
சேடுடையான்செங்காட்டங்குடியுடையான்சேர்ந்தாடுங்
காடுடையானாடுடையான்கணபதீச்சரத்தானே.

உ

திருவருள் துணை.

ௐ நந்திபதி கோல்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.
[திருவாசகம்]

# வித்தகம்

புதுவை
தா ஈ ௵ புரட்டாசி மீ உ ௨

## அழுகை.

சந்து என்னும் அருவமான அசுத்த காம உணர்ச்சியாகிய அசுத்த வாயு தூய்மை யடைதற்கு இன்றியமையாத கந்தருவ வழக்கம் என்னும் களவொழுக்கப் பயில்வுகளால்,

உடலகத்து ஆக்கமுற்ற நன்மணி நாதர் தூலத்தின் மறத் தன்மையாகிய அழுக்கை — களிம்பை — தடிப்பை அகற்றுதலாகிய அழுகை என்னும் சாதகத்தை உறு துணையாகக் கொண்டு துன்பத்துள் துன்பமாகிய சாதலைத் தடுத்து,

நித்தியத்துவம் பெற்ற தத்துவப் பெரியாராகிய இடைக்காடர் திருவாய் மலர்ந் தருளிய மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் ஒழிபு என்னும் நான்காம் அத்தியாயத்தில் மூன்றும் சூக்த மகுடமாகி மிளிர்வது "அழுகை" என்பது.

இதற்கு முந்திய சூக்த மகுடமாகிய "பிணி" என்பது "வித்தகம்" தொகுதி 3 இல.39இல் ஷை சூக்தம் முதலியவாறு சிறிது விளக்கிக் கூறப்பட்டது.

ஈண்டு "அழுகை" என்பதன் பெற்றி ஒரு சிறிது கூறப்படும்.

பிணி என்னும் வாயுவானது சீவர்பால் ஈவு ஏற்புக்களை நிகழச் செய்து கழுவாய்க்குத் துணை புரிகின்றது எனவும்,

அமல மடைந்து உடலில் உறைதலால் அவ் ஈவு ஏற்புக்களைத் தடுப்பது எனவும்,

நன்மணி நாதமாய் நின்று மருத்து என்னும் அவ் வாயுவின் நூல் என்னும் ஒழுங்கை மாண்புறச் செய்து—நடை அடைவை நிறையுட் புகுத்தி உய்தி யடையச் செய்கின்றது எனவும்,

இன்ன நீர்மையால் இத்தகைய பிணி உலகில் அநாதியாகவே நிலவும் பான்மை யுடையது எனவும்,

பிணி

என்னும் மேலைச் சூக்தத்தால் கூறிப் போந்த புலவர் பெருமான்

அழுகை

என்னும் இச் சூக்தத்தால் மருத்து என்னும் வாயு தூய்மை யடைதற்கேற்ற வாறு அத்தகைய நன்மணி நாதம் உடலகத் துள்ள உறுப்புக்களின் அழுக்கை நீக்குதலாகிய கழுவாயின் இயல்பு என்னும் அழுகையின் பெற்றி கூறுகின்றார் என அறிதற் பாற்று.

### மூவடி முப்பது.

———

ஒழிபு. 4.

அழுகை—சூக்தம். 3.

உறுதுயர் தடுக்குநர் பெருந்துணை யுய்வின்
மறமீர் கழுவாய் மறைநுவல் தொன்மொழி
யம்மூன் றுடைமையி னழுகையு மியலவே.

என்பது சூக்தம்.

வாய்மையான பிரமசரிய ஒழுக்கத்தால் மறத்தாறு நீங்கி அறத்தாறு கைவரப் பெறுதலை உணர்த்துதல் முதலிற்று இச் சூக்தம் என்க.

அழுகை என்றால் கண்களில் நின்று உவர்நீர் வடிதல் எனவும்,

இஃது ஒருவன் தனது உள்ளத்துற்ற பெரிய துன்பத்தை நீக்குதற்கண் உறு துணையாவது எனவும்,

உய்தியில் குற்றமாகிய மகா பாதகங்களை நீக்குவது எனவும்,

மறைகளால் கூறப்படும் பழைய மொழியும் இதுவே ஆம் எனவும்,

இன்ன மூவியல்பும் உடைமையான் இவ் அழுகை என்பது உலகில் இயற்கை யாகவே நிலை பெற்றுள்ளது எனவும்,

உலகியலுக்கு ஒப்பியவாறு எம்போலியர் பொருள் காணும் படியும்,

உண்மையை நாடும் ஆற்றல் உடையார் அதனைக் குருவருளால் அறிந்து உய்தி யடையும் படியும் அமைக்கப் பட்டது இச் சூக்தம் என்க.

இச் சூக்தத்துக்கு உலகியலுக்கு ஒப்பியவாறு உரை கண்ட பண்டை ஆசிரியர் கூற்றும் ஈண்டுக் காட்டப் படுகின்றது.

1. "உள்ளத் துயர் அடுத்துள்ளோன் பக்கல் பரிவுரை யாடியேனும் வாய் விட்டழுங்கி யேனு மன்றி அகலாதாகலின் மானம் இறப்ப வரும்வழி ஒல்லெனப் பொங்கிய துயர் ஒழிப்பார்க் கிதுவே துணை யாதல்."

"2. ஆன் முலை யறுத்தல் அந்தணர் நலித்தல் முதலிய பெரும் பிழை செய்தோரும் தம் பிழை யுணர்ந்து மனம் அழுங்கின் உள்ளம் பதிந்த அரிட்ட வித்துக்கள் சிறிது சிறிதாக அகலுமெனல் சான்றோர் கோளாகலின் மறமீர் கழுவாயாதல்."

3. "பெரும் பிறிதுற்ற எற்புச் சட்டக மீறு சொட்டுக் கண்ணீரேனு மிட்டன்றி

1566



நன் காட்டனுப்பல் தகாதெனத் தொன் மறை நுவலலின் அதற்குத் துணையாதல்."

பின் வருவது இந் நூற் பதிப்பாசிரியர் குறிப்புரை:—

"அழுகையை ஆசிரியர் உறு துயர் தடுக்குநர் பெருந்துணை, உய்வின் மறமீர் கழுவாய், மறை நுவல் தொன்மொழி என மூப் பொருள் விளங்க அமைத்து வைத்தமை காண்க."

5. "அம் மூன்றனுள் முதன்மைக் கணின்றது உறு துயர் தடுக்குநர் பெருந்துணை என்பது; ஏனெனிற் றடுக்கற் கொண்ணாது. துயரம் மேன்மேலும் பொங்குற்று ஆற்றொணாத் துயராகி அகப்பட்டாரை ஆழ்த்துங் காலை அதிற் றப்பித் தெளிதற் குற்ற துணையாக நின்றது வாய்விட்டழுங்குதலே ஆம்.

"இரண்டாவதி னின்ற உய்வின் மற மீர் கழுவாய் என்றது உரையாசிரியர் கூறியவாறு தீயவை தீர்தல் என்பதனிற் சார்ந்து உய்வின் மறம் என்னும் பிறவித் துன்பிற் சேர்க்கும் "அறம் பாவமென்னும் அருங் கயிற்றாற் கட்டுண்டு" என்னும் இரு வினையா னெருக் குறுவது பட்டாராய் மறஞ்செய்தேமெனக் கண்டு இரு வினைத் துய்தொழிப்பான் றொடங்கி உய்ந்து போதற்கு வழிகாண முயன்று மறியாராகிப் பேரிடற் படற் காற்றாது செய்வதொன் றறியாராய் "அழுதாலுன்னைப் பெறலாமே" என்றபடி மேனோக்குற் றழுமழுகையு மாம் என்பதும் அறிக."

"மூன்றாவதி னின்ற மறை நுவல் தொன் மொழி என்றது உரையாசிரியர் நன்கு தெளியக் கூறியதான தொன் மறையின் மொழி என்பதாம். அம் மொழி தான் இறந்து பட்டாரது பிணத்தின் மேல் ஒரு சொட்டுக் கண்ணீரேனும் விழ வீழ்ந்தழாது முதுகாடு சேர்த்தல் கூடாது என்பதாம். இதனாற் றொன்மறையென்பது இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் வட நூல் மறை நான்கும். நாடு புகுதற்கு முன்பே நமக் கென்று தொன்று தொட்டிருந்து வந்த தமிழ் மறையாமெனப் பொருள் கொள்க. ஏனெனின், மக்கள் தோன்றிய காலந் தொட்டு நாடு வழங்கி வரும் தாய் மொழியாகிய தமிழ் மொழி எனும் பொருள் தோன்ற நின்ற தொன் மொழி எனக் கூறிய வாற்றானும் என்க. ஆசிரியர் இடைக்காடனார் காலம் கடைச் சங்க காலமாகலின் அக் காலத்தே வடநூன் மறை தமிழுலகத்தே புக்கு மக்கள் பால் விரவி நின்ற தன்மை கண்டு புதுமையீதெனவும் பழமை யீதெனவும் அறிய வைத்த தொன்மொழி என்பதை உணர்ந்து தேர்க."

இவ் வாற்றால், இச் சூத்தத்துக்கு உலகியலுக்கு ஒப்பிய வாறு கூறப் பட்ட பொருள் கண்டு கொள்க.

மேல் இதன் உண்மைப் பொருள் ஒரு சிறிது கூறப்படும்.

அழுகை என்றால் என்னை?

கண்களில் நீர் வடிதலை அழுகை என்பர் உலகோர். அஃதாவது ஒரு சீவன் துயருற்ற போது அதனால் எழும் அக்கினியினால் தாதுக்கள் தாக்குண்டு கண்களில் நின்று அவ் அக்கினியின் ஆவி நீராக மாறி வெளிப்படுதல் உலகியலில் அழுகை எனப் படும் என்பது.

எம் போலிய உலக மாக்கள் நோய் முதலிய வற்றால் துன்புறும் காலங்களில் நீலிக் கண்ணீர் வடித்துப் புலம்புவார்கள்.

ஆலயங்களினும் சென்று தங்கள் தங்கள் ஆக்கம் கருதியும் கேட்டான் வருந்தியும் கண்ணீர் உகுத்துப் புலம்புவார்கள்.

இன்ன போலி வழக்காகிய அழுகையினால் கடவுள் அருளை எளிதில் பெற்று விடலாம் என உலகோர் பலர் ஓலமிடுவர்,

"அழுது அழுது மணிவாசகர் அடியை அடைந்தனர்" ஆதலால் தாமும் அழுது கொண்டே இருந்து விட்டால் திருவடி தானே கிடைக்கும் என்பர்.

இதற்காகவே சிலர் வேண்டும் போதெல்லாம் கண்களில் நின்று நீரைப் பெருக்குதற்குப் பயின்று தேர்ச்சி பெற்று இருக்கின்றனர்.

இன்ன நீர்மை வாய்ந்த கள்வர் படிற் றொழுக்கம் நிறைந்த குடிக்கைகள் ஆதலால், இவர் தம் வஞ்ச மனத்தாலாய அழுகையினால் உலக மாக்கள் பலர் பிரமை அடைந்து,

"ஓ! ஓ! இவரன்றோ மெய்யடியார்! அடடா! என்னான்றும் தைல தாரை போல இவர் மனம் உருகிக் கொண்டே இருக்கின்றதே! இவரன்றோ "அழுதால் உன்னைப் பெறலாமே" என்னும் மணிவாசக மந்திரப் பொருளை அறிந்தவர்! இவருக் கன்றோ ஈசனருள் எளிதிற் கிடைக்கும்!"

என்று இன்னோரன்ன அறியாமை நிறைந்த சிந்தனைகள் பலவற்றால் கட்டுண்டு இவ் வஞ்ச மனத்தினரை அடி பணிந்து நிற்பர்; இவருக்கு வேண்டிய யாவும் அளிப்பர்; இவர் இறந்த பின் இவரையும் முத்தியடைந்த தத்துவப் பெரியார் வரிசையில் வைத்துப் போற்றுவர். உலகியல் இதுவே என்க.

இன்ன போலி அழுகையாகிய நீலிக் கண்ணீரை

"உறு துயர் தடுக்குநர் பெருந்துணை"

எனவும்,

"உய்வின் மற மீர் கழுவாய்"

எனவும்,

"மறை நுவல் தொன் மொழி"

எனவும் விதந்து கூறுதல் விந்தையினும் விந்தை அல்லவா?

ஐயாட்டைச் சிறார் அனையார்க் கன்றோ தகுதி யுடையது இத்தகைய மதிப் பொலிவு!

"பாலானாம் ரோதனம் பலம்"

என்பது நீதி நூல். (பாலர்களுக்குக் கண்ணீர் வடித்து அழுதல் பலமானது.)

அசுத்த தநுவுடைய சீவர் யாவர்க்கும் பொது வகையான் அமைந்த போலியான இவ் அழுகை என்னும் நீலிக் கண்ணீர் மேலே கூறிய மூன்று காரியங்களையும் அளிக்கும் ஆற்றல் உடைய தாகுமா?

இந்த அழுகை இத்தகைய அரிய பெரிய பயப்பாட்டினை உடைய தாகுமா?

1307



இதனைத் தானு வேதம் முறையிடும் பழமொழி என விதந்து கூறுவது?

இன்ன போலி அழுகையாற்றானு மணிவாசகர் முதலிய மெய்யடியார் எல்லாம் தமது உடலுயிர் அசுத்தம் நீங்கி அமல மடையப் பெற்று அருளாய் வெளியாய் உலகு கண்டிட மறைந்து உண்மை முத்தி அடைந்தனர்?

மிகச் சுலபமான காரிய மன்றோ இது? யாது சிரமமு மின்றி மிக எளிதிற் பயிலக் கூடிய சாதக மன்றோ இது?

ஓ! ஓ! தத்துவப் பெரியாராகிய உத்தமர் எல்லாம், பிணி மூப்புச் சாக்காடுகளுக்கே இடனுகிய அசுத்த தநுவாகிய மருளுடம்பினராய் மூதேவியால் ஆவேசிக்கப் பட்டு ஓவாது அழுது கொண்டே இருந்தனரா?

நன்று! நன்று! இது தான் தூலப் பொருள்; போலிப் பொருளாகிய பொட்டப் பொருள் என அறிக.

மேல் இச் சூக்தத்தின் உண்மைப் பொருள் ஒரு சிறிது கூறப்படும்.

1

(அழுகை) உய்வு இல் மறம் ஈர் [கழுவாய்

2

உறு துயர் தடுக்குநர் பெரும் துணை

3

மறை நுவல் தொல் மொழி (ஆதலால், அழுகையும் தூயலவே.

அ

அழுகை என்பது நிவிர்த்தி நெறி நாடி உய்தி யடைதலைத் தடுக்கும் தூலத்தின மறத் தன்மையாகிய தடிப்பு என்னும் களிம்பை அகற்றும் கழுவாயாகி உள்ளது.

ஆ

அதனால், துன்பத்துள் துன்பமாகிய சாக்காட்டை ஒழித்து வீடு பெற முயலும் பெற்றியுடைய பக்குவ சீவர்க்கு இன்றியமையாத் துணையாகி உள்ளது.

இ

தத்துவப் பெரியார் அருளிய மறைகளாகிய வேத நூல்களால் நிவிர்த்தி நெறிக்கு இன்றி யமையாச் சாதனம் என விதந்து கூறப்படும் அநாதியான உபதேசமாகி உள்ளது.

ஆதலால் அழுகையும் சீவர்கள் உய்வுக்கு இயற்கை முறையான் அமைந்த சாதகமே என்பது.

[அழுகையும் என்புழி உம்மை எச்சத்தோடு சிறப்பு.]

வாய்மையான அழுகை என்றால் என்னை? எனின், சிறது கூறுதும்:—

அடுத்த வாரம் சரஸ்வதி பூஜையை முன்னிட்டு "வித்தகம்" வெளிவரா தென்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

[ப—ர்]

களவொழுக்கப் பயில்வால் ஆக்கமுறும் அக்கினியானது தூல உறுப்புக்களையும் தாதுக்களையும் தாக்கி—வெதுப்பிக் கபாலத்தில் இருக்கும் சிலேஷ்ம வடிவமான மத்திஷ்கம் என்பதனை இளக்குவதால்,

அஃதாவது குளிர்ச்சியினால் தோய்ந்த நெய்யை தூலாக்கினியானது இளக்குவது போல காமக் கனல் மத்திஷ்கத்தை இளக்குவதால்,

என்பின் உள் ஆகிய மஜ்ஜையானது உருகி கீழ் நோக்கி நரம்புத் தாரை வழியாய் விந்து எனும் நாமம் பெற்று வெளிப்படுதலே வாய்மையான அழுகை எனப்படும் என அறிதற்பாற்று.

இதுதான் பிரமத்தைச் சரித்தல்—விந்து எனும் பிரமத்தைச் சரித்தல்—தன்னிலையிலும் முன்னிலையிலும் உள்ள அக்கினியால் மஜ்ஜையை இளக்கி—உருக்கிச் சரித்தல்—வெளியேற்றி அமலமாக்கி அமுதமாக்கல் என்பது;

வாய்மையான பிரமசரியம் என்பது; பிரமத்தை அடையும் நெறி என்பது;

விந்து என்னும் வித்தைச் சுட்டு உண்ணுதல் — வித்தை அக்கினியிற் சுட்டு அசுத்தம் நீக்கி—நிரோதமாக்கி அமுதமாக்கி உண்ணுதல் என்பது; உண்டு நித்தியத்துவம் அடையும் நெறி என்பது; பிரமத்தை உண்டு பிரமமாகும் நெறி என்பது.

விந்துவே ரஸம். அதுவே பிரமம். விந்துவே அமுதம் — சிவம் என்பது சுருதி.

## கடோபநிடதம்.

———

தம் வித்யாத் சுக்ரம் அம்றுதம்
தம் வித்யாத் சுக்ரம் அம்றுதம்.

(இ—ள்) அதனை (பரமான்மாவை) விந்து என்றும் (தூயது என்றும்) அமிர்தம் என்றும் அறிக என்பது. (சுக்லம் சுக்ரம் என்பன லகர ரகர ஒற்றுமை.)

விந்துவே கடவுள் வடிவம். உடலகத்துக் கடையாயும் உள்ளாயும் விளங்குவது. (கடை + உள் = கடவுள்) விந்துவே சீவன் வசிக்கும் தானம், சீவனுகிய சிவன் வசிக்கும் தானம் என்ப.

இடமும் பொருளும் ஒன்றே ஆம். விந்துவின் இயக்கமே (வாயு) நாதம் எனப்படுவது. அமல நாத வடிவமே சிவ வடிவம்.

இவ் விந்து சரித்தலால் — சரிக்கப்படுதலால் அசுத்தம் நீங்கி அமலமடைந்து உடலில் உறைந்தபோதுதான் — இந்திரிய நிரோதம் கைவரப் பெற்ற போதுதான் சிவோகம் தலைப்படும் — பிரமமாதல் கைகூடும் என அறிக.

வாய்மையான அழுகையால் ஆம் பேறு — பிரமசரியம என்னும்

அநுட்டானப் பேறு இதுவே என அறிக.

“ஓ! ஓ! நன்று கண்டீர்! உலகமே இணை விழைச்சால் இயங்குகின்றது. அதற்கெனவே அசைகின்றது. அதனாலேயே அசைக்கப் படுகின்றது. ஆதலால் நீவிர் கூறுவது போல அழுந்து கொண்டு தான் இருக்கிறது; பிரமத்தை சரித்துக் கொண்டுதான் இருக்கிறது.”

“ஆனால் நம் இடைக்காடர் கண்டு பிடித்ததாக நீர் கூறும் இவ் அழுகையின் பண்பும் பயனும் ஒருவராலும் அநுபவிக்கப் படவில்லையே?” எனின்,

ஆம். அஃது உண்மையே! சீவர்கள் தற் சுதந்திரத்தால் — அவா மிகுதியால் இச்சையின் விகாரப் பாட்டினால் உளற்றும் இணை விழைச்சு அளவில் பிணிகளையே — பிணி மூப்புச் சாக்காடுகளையே — மரணத்தையே சன்மானமாக வழங்குகின்றது. உலகியல் இதுவே.

ஆனால், ஆசான் உரையில் கட்டுண்டு உளற்றும் களவொழுக்கப் பயில்வுகள் விந்து என்னும் சுக்கிலத்தைக் காலம் கண்டு நிறை கொண்டு சரித்துச் சரித்து அமலமாக்கும்.

இவ்வாறு விந்து அமலமடைந்து உடலில் உறைதலால் — இந்திரிய நிரோதம் கைவரப் பெறுதலால் உடலுயிர் அமல மடைந்து பிணி மூப்புச் சாக்காடுகள் ஒழியப் பெறுகின்றன; நித்தியத்துவம் உளதாகின்றது.

இது தான்

“அழுது அழுது அடியடைந்தார்”

என்பதன் உண்மை என அறிதற் பாற்று.

இதுபற்றியன்றோ மூவடி முப்பது என்னும் இவ் அருமறையை அருளிய தத்துவப் பெரியாராகிய இடைக்காடர் இன்பக் கூறு என்னும் முதலாம் அத்தியாயத்தில்,

உலகியலாகிய பிரவிருத்தி நெறிக்கும் உண்மை நெறியாகிய நிவிர்த்தி நெறிக்கும் காமமே அடிப்படையாய் உள்ளது — மூல காரணமா யுள்ளது என்னும் இயற்கை முறையை விளக்குபவராய்,

“உலகம் வழங்கலின்”

எனவும்,

“உயர்ந்தோர்க்கு நேர்தலின்”

எனவும் அக் காமத்தின் நீர்மையையே முதற்கண் வைத்து விளக்கிப் போதருவார் ஆயினர் என்பது.

“உறு துயர் தடுக்குநர் பெரும் துணை”

நிறை முறையான சிற்றின்ப நுகர்ச்சியால் — களவொழுக்கத்தால் உடலில் உள்ள அசுத்தம் என்னும் — அசுத்த நிறை என்னும் மறத் தன்மை நீங்குகின்றது — அணு அணுவாக ஒழிகின்றது;

உறுப்புக்களில் உள்ள தடிப்பு — உப்பில் இருக்கும் துப்பு நீங்குகின்றது;

தூலத்தின் தடிப்பு — களிம்பு — மறத்தன்மை ஈர்க்கப் படுகின்றது — அறுக்கப் படுகின்றது — ஒழிக்கப் படுகின்றது.

அசுத்த நிறை என்னும் களிம்பே — மலமே உடலகத்துள்ள சுத்த நிறையைக் கெடுத்து பிணி மூப்புச் சாக்காடுகளை உளவாக்குகின்றது.

இம் மறத்தன்மை நீங்காத வரை — உடலுயிர் அமல மடையாத வரை பாசங்கள் பற்றுக்கள் நீங்கி உய்தியடைதல் — வாய்மையான புருஷார்த்தங்களைப் பெறுதல் — நித்தியத்துவம் பெறுதல் முடியாத காரியம்.

இது பற்றியே

“உய்வில் மறம்”

எனப் பட்டது.

இம் மறத்தன்மை யாகிய களிம்பை ஈர்க்கும் கழுவாய் — நீக்கும் சாதகம் வாய்மையான அழுகையே ஆம். அழுக்கை அழுக்கால் அகற்றும் உபாயம் இதுவே.

அழுகை என்பது காயத்துள்ள — உடலுயிரில் உள்ள பாசமாகிய — களிம்பாகிய அழுக்கு நீங்குதற் குரிய சாதகத்தையே குறித்த தாகும்.

அழுகை அழுதல் அழுகல் அழுங்கல் என்பன ஒன்றே. இவை அழிதல் — கெடுதல் — அசுத்தம் நீங்குதல் எனப் பொருள் படும்.

அழுங்கல் என்றால் இரங்குதல் — வருந்துதல் — நைதல் — கெடுதல் என்பர். அழுகல் — அழுந்துதல் — கெடுதல் எனவும் ஊற்றை எனவும் மலம் — அழுக்கு எனவும் பொருள் படும்.

ஆகார பீஜ யோனி விவகாரத்தால் மலம் என்னும் களிம்பு களிம்பு என்னும் கஷாயம் நீங்க வேண்டும் எனவும் அதனாற்றான் சித்த சுத்தி உளதாகும் எனவும் சாந்தோக்கியம் முறை யிடுகின்றது.

(“வித்தகம்”) தொகுதி 1 இல.19 இல் “அருந்தல் பொருந்தல் அனந்தல்” என்னும் கட்டுரையில் காண்க.)

உடலுயிரில் உள்ள மறத் தன்மையாகிய — களிம்பாகிய கஷாயம் பிரம சரியத்தால் நீக்கப்பட வேண்டும் என்னும் உண்மை பின் வரும் பிரபல சுருதியாலும் நன்று வலியுறுதல் கண்டு கொள்க.

### சாந்தோக்கிய உபநிடத தாற்பரிய வர்ணனம்.

“எக் கடுக்காய் முதலிய வற்றால் உண்டாய ரச சம்பந்தத்தானே வஸ்திராதியில் சிவப்பு முதலிய நிறங்கள் மிக வலிய வாமோ அவ் இரசத்தை மதிமான் கஷாயம் என்பன். அவ் இரசம் போல் காமக் குரோதாதி விகாரமும் சித்த ரூப வஸ்திரத்தை இரஞ்சித மாக்குதலின் காமாதியையும் நூலுணர்ந்தோர் கஷாய சப்தத்தால் கூறினர். வஸ்திரத்தின் கண்ணே இருக்கும் கஷாய ரசம் உவர் மண் முதலிய வற்றானே நீங்குவதே போல காமாதி கஷாயங்களையும் ப்ரஹ்ம சரியாதி சாதனங்களால் நீக்கலாம்.”

1309



"நாரதர் ப்ரம்மசரியாதி சாதனங்களோடு கூடியவரும் சம்சார சமுத்திரத்தினின்றும் வைராக்கிய முடையவருமாவர். ஆதலின் சுருதி பகவதி நாரதரை 'ம்ருத க்ஷாயர்" என்றனள்."

நித்தியத்துவம் பெற்ற தத்துவப் பெரியாராகிய பண்டைக் காலத்து இருடிகள், முனிவர்கள், சித்தர்கள், அடியார் ஆழ்வார் என்பவர் எல்லாம் நிறை முறையான இல்லற ஒழுக்கத்தால்—சிற்றின்ப நுகர்ச்சியால்—பிரமசரியத்தால் — வாய்மையான அழுகையால் உடலுயிரில் உள்ள அசுத்தத்தை நீக்கி அவற்றை அமல மாக்கியே உய்தியடைந்தவராவர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. அவ்வவர் அருளிய மறைகளே இதற்கு உறு சான்றாகும்.

சரீரத்துள்ள ஒன்பது துவாரங்களாலும் மயிர்க் கால்களாலும் வெளியேறுவது — ஒழுகுவது அழுக்கு என்னும் மலமே ஆதலின் இவை கழியப் பெறுதலும் அழுகையே ஆம்.

எனினும் இவை யாவும் நிறையோடு கழிதற்குக் காரணமாய் விளங்கும் சிற்றின்ப நுகர்ச்சியால் விந்து வெளியேறி அசுத்தம் நீங்குதலே ஈண்டுத் தலைமை பற்றி அழுகை என விதந்து கூறப்படுவதாயிற்று என அறிக.

இது பற்றியே இணை விழைச்சு இறுதிக்கண் ஸ்நானம் அத்யாவசியகம் என நூல்களால் விதிக்கப்பட்டது. "வேர்த்தால் குளித்து" என பட்டினத்தடிகள் அருளியதும் அறிக.

அகத்தும் புறத்தும் மாசு நீங்குதற்கு "அழுகை" என்னும் இணை விழைச்சே முக்கிய சாதனமாகும்.

அவைதீகமே வைதீகத்துக்கு அடிப்படை ஆதலால், முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால்-சிற்றின்ப நுகர்ச்சியால் உளவாகும் இத்தகைய அழுகையாற்றான் பாசு பதம் சித்திக்க வேண்டும்; பாசு என்னும் மாசு பதமடைய வேண்டும்—பரிபாகம் பெற வேண்டும்--இருவினை ஒப்பு மல பரிபாகம் கைவர வேண்டும். இஃதன்றி வேறு தடம் யாண்டுளது? வேறு தடம் யாண்டும் இல்லை.

வாய்மையான அழுகை எனப்படும் பிரமசரிய அநுட்டானத்தால் தூலத்தின் மறத் தன்மையை ஈர்ப்பதேகல் என்னும் பஞ்சதநுவை அக்கினியில் அவியாகக் கொடுத்தல் என்பது. இது தான் கலவி (கல்+அவி) எனப்படுவது. பஞ்சம ஆகுதி என்பதும் இதுவே ஆம். இத்தகைய அக்கினி யாண்டுளது? எனின், தன்னிலையிலும் முன்னிலையிலும் உண்டு என்ப.

"உபஸ்த துவார வடிவ கோளகத்தை அடைந்து வீரியத்தோடு கூடிய உபஸ்த இந்திரியம் வெளிப் பட்டது" எனவும்

"அதுவே பஞ்சம ஆகுதியின் சாதனமும் ஆம்"

எனவும் ஐதரேயம் முறையிடுவதன் உண்மையும் இதுவே ஆம்.

இவ் உண்மையைக் குருவருளால் வாய்மையாக உணராவிடின், காம வெறி கொண்டு நிறை முறையின்றி ஒழுகி மா பாதகர்களாய்ச் சாதலடைவர் உலகோர். ஆல காலம் எனும் நஞ்சை உண்பது என்பதும் இதுவே. நெறுப்பாறு மயிர்ப் பாலம் என்பதும் இதுவே.

ஆகமங்களில் "ம்ருத தீக்ஷை" என விதந்து கூறப்படுவதன் உண்மையும் இதுவே ஆம்.

வாய்மையான அழுகையினாற்றான் அசுத்த தநுக்கள் "ம்ருதம்" அடைந்து — மறத்தன்மை நீங்கி — செத்து—நீறி மாறுவன ஆகும்; விமலமாய் அமல மடைவன ஆகும்.

விந்து என்னும் வித்தைச் சரித்து- வெளியேற்றிச் சுட்டு உண்ணுதல்— தன்னிலை முன்னிலைகளில் உள்ள அக்கினியில் சுட்டு உண்ணுதல் என்பதும் இதுவே. வித்தைச் சுடுதலால் அதனை "ம்ருதம்" அடைந்து மாறிய விமல தநுவில் உறையச் செய்து உண்ணுதலே அமுதம் உண்ணுதல் ஆம்.

அமுதமே பிரமம்—சிவம் என்று பெரு முழக்கிடுவது சுருதி. விரிப்பிற் பெருகும்.

இவ்வாற்றால் பிரமமாகிய விந்தை விந்து என்னும் வித்தைச் சரித்து— வெளிப் படுத்தி அசுத்தம் நீக்கி— நிரோத மாக்கி—அமுதமாக்கி உண்டு உய்தி பெறுதலே—பிரம மாதலே— நித்தியத்துவம் பெறுதலே வாய்மையான அழுகையின் பண்பும் பயனும் ஆம் என்பது நன்று கடைப் பிடிக்க.

## திருமந்திரம்.

விந்துவு நாகமு மேவக் கனன்மூல
அங்க னனன்மயிர்க் காறூறு மன்னிடச்
சிந்தனை மாறச் சிவமக யர்நவே
விந்துவு மாளுமெய்க் காயத்தில் வித்திலே.

(ஷை 12-ம் தந். விந்துஜயம். செ.27)

என எம் அண்ணல் அருளிய அநுபவத் திரு வாக்கையும் ஆராய்ந்து தெளிக.

நிறை முறையான சிற்றின்ப நுகர்ச்சியாற்றான் — விந்து என்னும் பிரமத்தைச் சரித்து — வெளியேற்றி அமலமாக்கி உடலோடு உறையச் செய்தலாகிய வாய்மையான அழுகையாற்றான் பிரமத்தைக் கண்டு பிரமமாதல் கைகூடும் — சிவோகம் தலைக்கூடும் என்க.

இதனாலன்றி, முன்னிலைகளை வெறுத்து ஒருபால் ஒதுங்குவதால் உடலுயிர் தூய்மை அடைந்து சிவோகம் கைவரப் பெறுதல் முயற் கொம்பே ஆகும்.

இது பற்றியன்றோ,

## திருவாசகம்.

"ஆனால்வினையேன்அழுதால்உன்னைப்
[பெறலாமே"

என சுருதி முழக்குக்கு ஒப்பக் கூறியருளினார் மணிவாசகப் பிரபு என அறிக.

இவ்வாறு அருளிய மணிவாசகர் வாய்மையான அழுகை இன்னது என்பதனையும் அதன் பயனையும் கூறி விட்டனர்.

இவ் அரிய பெரிய உண்மையை

ஒன்றும் போதா அறிவிலிகளாகிய எம் போலியர்க்கு உணர்த்துதற்கே பின் வரும் பாசுரம் எழுந்தது என அறிக.

## திருவாசகம்.

———

என்புள் ளுருக்கி யிருவினையை யீடழி
[க்துக்
துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மை
[செய்து
முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுந்த
அன்பின் குலாத்தில்லை யாண்டானைக்
[கொண்டன்றே.

(கோயில் குலாப்பத்து பாசுரம். 3)

இவ் அரிய பாசுரத்தில் என்பு உருக வேண்டும் எனக் கூறாது என்பு உள் உருக வேண்டும் எனக் கூறியது எற்றிற்கு? என்பின் உள்ளே இருப்பது யாது? அது தான் ஆறும் தாதுவாகிய மஜ்ஜை என்பது.

சிற்றின்ப நுகர்ச்சியாற்றான் — "பயனுறு கன்னியர் போக"த்தினாற் றான் மஜ்ஜை உருக வேண்டும். மஜ்ஜை உருகிச் சுக்கிலமாய் வெளிப்பட்டு அமல காமாக்கினியால் அசுத்தம் நீங்கித் தூய்மை அடைதலே—இந்திரியம் நிரோதம் பெறுதலே இருவினையின் ஈடு அழியும் மார்க்கம் — இருவினையும் ஏற்ற இறக்கம் விடுபட்டுச் சமம் பெறுதற் குரிய சாதகம் என்று கூறப்பட்டது.

இதனால் மலம் பரிபாகம் அடையும்; விமல மாகும். துன்பம் களையப் படும். பேரின்ப லாபம் பெறப் படும்.

பெறப் படவே தன்மை முன்னிலை படர்க்கை என்னும் துவந்துவங்கள் தூய்மை அடையும். தன்னிலையே முன்னிலை யாதலாகிய உயரிய நிலை கைகூடும்.

அநாதியாகவே தூலத்துள்ள— உடலுயிரில் உள்ள பாசமாகிய மறத் தன்மை—தடிப்பு — களிம்பு நீங்கும்.

உடலுயிர் அசுத்தம் நீங்கி—அசுத்த நிறை நீங்கி அமல மடையவே, அமல நிறை என்னும் அமல ஒளி வடிவின ளாகிய எம் பெருமான் — தூய்மை அடைந்த அப்பு என்னும் அன்போடு குலவிய— அன்பு வடிவினனாகிய தில்லை யாண்டான் உடலில் குடி புகுவன்.

குடி புகவே பிரமமாதல்.—சிவமாதல் கைகூடும்.

உடலுயிர் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் பெறும் என அறிக.

"விந்து அடங்க விளையும் சிவோகமே"

என்னும் திருமந்திர சுருதியின் உட்பொருள் இதனால் நன்று விளக்கம் பெறுதல் கண்டு கொள்க.

"எந்தையே ஈசா உடலிடங் கொண்
[டாய்"

எனவும்,

"ஈனமற்ற காயமாய் இருப்பன் எங்கள்
[ஈசனே"

எனவும்
"மெய்க் கொண்டு வந்து புகுந்து
[வேதப் பிரானார் கிடந்தார்"

எனவும் வரூஉம் பிரபல சுருதிப் பொருளையும் நோக்குக.

பிரமம் எனப்படும் விந்துவைச் சரித்து—வெளிப் படுத்தி அமல மாக்கி உடலோடு உறையச் செய்தலாகிய வாய்மையான அழுகையின் பண்பும் பயனும் மேலே காட்டிய பாசுரத்தால் நன்று விளக்கப் பட்டமை கண்டு கொள்க.

சத்திய நெறியாகிய பண்டைய உண்மைச் சைவக் கொள்கையைத் தடக்கை நெல்லி என விளக்கும் வைர மணி விளக்கே அனையது இவ் அரிய பெரிய பாசுரம் என்பதும் மிகை யாமோ? மணிவாசகன் திரு வடிக்குப் பல்லாண்டு!

இவ்வாற்றால், அழுகை என்பதே

"உய்வின் மறம் ஈர் கழுவாய்"

எனப் பட்டதன் உண்மை கண்டு கொள்க.

"புரிந்ததன் கழுவாய்"

என மேலைச் சூத்திரத்தால் கூறப் பட்டதை விளக்கிய படியாம் இது எனவும் அறிதற் பாற்று.

"உறு துயர் தடுக்குநர் பெரும் துணை"

பிரமசரிய ஒழுக்கம் என்னும் களவொழுக்கப் பயில்வாகிய வாய்மை யான அழுகையை மேற் கொள்ளுதலால் — அழுகையே கழுவாயாகி உய்வின் மறத்தை ஈர்த்தலால் அதுவே உறு துயர் தடுக்குநர் பெரும் துணை யாய் அமைகின்றது என்க.

உறு துயர் எனப் படும் துன்பத்துள் துன்பமாகிய சாக்காட்டை — சீவர்களுக்கு இயற்கையாய் அமைந்த பிரவிருத்தி நெறியாகிய மரணத்தை ஒழியச் செய்து உய்தி பெற முயலும் பெற்றி யுடையார்க்குப் பெரும் துணை என அமைவது—மற நெறியாகிய பிறவி நெறியை ஒழித்து அற நெறி யாகிய நித்தியத்துவ நெறியிற் செல்லுதற் கண் இன்றி யமையாத் துணை யாகி உள்ளது அழுகையே என்க.

உறு துயர்—மிக்க துயர்-துன்பத்துள் துன்பம். சாதலே துன்பத்துள் துன்பம் ஆதல் கண் கூடு.

பொய்யில் புலவரும்

## குறள்.

———

"சாதலின் இன்னாத தில்லை"

என்றனர். சீவர்களுக்கு இயற்கை யான் உற்ற—பொருந்திய துன்பம்— பிறவி நெறியாகிய துன்பம் எனினும் ஆம். மரணமே பிறவி நெறி என்க.

அழுகை என்னும் கழுவாயால் கால் என்னும் வாயு அமல மடைந்து உடலில் உறைதலாற்றான் காலம் என்னும் காலன் உதைக்கப் படுகின் றான், மரணத் துன்பம் என்னும் உறு துயர்—மரணம் நீங்குகின்றது.

விந்துவில் ஆக்கமுறும் வாயு, அழுகை என்னும் களவொழுக்கப் பயில்வால் அவ் விந்து தூய்மை

அடையவே—நிரோதமாகவே, தானும் அவ் விந்துவோடு உடலகத்து உறைகின்றது.

இதனால் உடல், நாத சரீரமாய்— விந்து நாத சரீரமாய் — சத்தி சிவ வடிவாய் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் பெறுகின்றது.

வாய்மையான—நிறை முறையான அழுகை என்னும் கழுவாயால் அசுத்தம் ஒழியவே அதன் ஈற்றில் சுத்தம் சுத்தமாகிய அமலம் நிலைக்கின்றது என்க. அமலமே வாய்மை—சத்தியம்—சாந்தம்—சிவம் என அறிக.

ஊனமாகிய — இருளாகிய கிழற் சாயை மாயை. அஃதற்றால் ஞான சத்தி வாய்மை என்க.

இது பற்றியே அழுகை என்பது

“உறு துயர் தடுக்குநர் பெருந் துணை”

என்று கூறப் பட்டது என்க.

வாயு அமல மடைதலாகிய பிராண அபான நிரோதமே இந்திரிய நிரோதமும் ஆம்.

களவொழுக்கப் பயில்வாகிய அழுகையா னன்றிப் பிற வாற்றால் வாயு அமல மாதல்—நிரோத மாதல் அசம்பாவிதமே ஆகும். “காற்றைப் பிடிக்கும் கணக்கு” — சாதகம் இதுவே ஆம். விரிப்பிற் பெருகும்.

“மறை நுவல் தோன் மொழி”

வாய்மையான பிரமசரிய ஒழுக்கமாகிய அழுகையே உடலுயிரில் உள்ள அசுத்தத்தை—மலத்தை நீக்கி—பிணி மூப்புச் சாக்காடுகளை நீக்கி—ஊனத்தை அறவே ஒழித்து வீடு பேற்றை அளித்தலால் வாய்மையான புருஷார்த்தங்களை அளித்தலால் இதனை “மறை நுவல் தொன் மொழி” என்று கூறுகின்றார் சித்தர் பெருமானாகிய எமது இடைக்காடர்.

இத்தகைய இயற்கை முறையான-வாய்மையான சாதனமாகிய அழுகையே யன்றி உடலுயிர் அமல மடைந்து நித்தியத்துவம் பெறுதற்கு வேறு சாதனம் இல்லை ஆதலால்,

இதனையே பல வகையான கற்பனைகளால்—பரி பாஷைகளால் தத்துவப் பெரியாராகிய இருடிகள் முனிவர்கள் சித்தர்கள் மெய்யடியார்கள் அருளிய மறைகள் முக்கியமாகக் கூறும் என்க.

இவ் உண்மையையே அநாதி காலம் தொட்டு காலந் தோறும் தத்துவப் பெரியார் அநுபவத் திருவாக்குகளாய் வெளிப்படும் மறைகள் யாவும் கூறும் என்பதில் —— இதுவே “மறை நுவல் தொன் மொழி” என்பதில் எட்டுணையும் ஐயப்பாடு ஆமோ?

“ஆனால், வினையேன் அழுதால் உன்னைப்
[பெறலாமே..

என்னும் திருவாசக தெய்வச் சுருதியே இதற்கு உறு சான்றாதல் கண்டு கொள்க.

## திருவாசகம்

“.........சிவனை என் சிவலோகக் கோனை
.............குறுகிலேன் நெடுங்காலம்......
ஊனை யானிருந்து ஓம்புகின்றேன்”

எனவும்,

“செடியா ராக்கைத் திறமற வீசிச்
[சிவபுர நகர் புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டென்
[கண்ணிணை களி கூறப்
படிதான்இல்லாப்பரம்பரனேயுன்பழவடி
[யார்கூட்டம்
அடியேன்காணஆசைப்பட்டேன்கண்
[டாயம்மானே;
(ஷை ஆசைப்பத்து. பாசுரம். 9)

எனவும்

“செடி சேருடலைச் செல நீக்கிச் சிவ
[லோகத்தே நமை வைப்பான்”

எனவும் கூறி யருளிய மணிவாசகன் ---கோவை அருளிய கோமான் செடி சேருடல மாகிய மருளுடம்பை நீக்கி --மாற்றி விமல யாக்கை பெற்றுச் சிவ தரிசனம் பெறுதற்கு--சிவலோக வாழ்வு பெறுதற்கு வாய்மையான அழுகையே யன்றி வேறு சாதனம் இல்லை என வற்புறுத்துபவனாய்

“வினையேன் அழுதால் உன்னைப் பெற
[லாமே”

என மறை முழக்குக்கு ஒப்ப மணிவாய் மலர்ந்து அருளினான் என அறிதற் பாற்று.

வாய்மையான அழுகையாற்றான் உடலுயிர் அமல மடைந்து ஞானாகாசத்தில் ஒடுங்குதல் கைகூடும் என்பதனைப் பின் வரும் அப்பர் அருமறையும் நன்று வலியுறுத்துதல் காண்க.

## அப்பர் தேவாரம்.

தந்தையார்தாயாருடன்பிறந்தார்
தாரமார்புத்திரரார்தாம்தாம்ஆரே
வந்தவாறெங்ஙனேபோமாறேதோ
மாயமாமிதற்கேதுமகிழவேண்டாம்
சிந்தையீ ருமக்கொன்றுசொல்லக்
[கேண்மின்
திகழ்மதியும்வாளரவுந்திளைக்குஞ்
[சென்னி
எந்தையார்திருநாமநமச்சிவாய
என்(று)அழுவார்க்கு
இருவிசும்பில்இருக்கலாமே
(ஷை பலவகைத் திருத்தாண்டகம் பாசு.10)

“நமச்சிவாய” என்பதனாற் குறிக்கப் பட்டது எம் பெருமான் திருவடியாகிய அமல ஐ காரம்.

களவொழுக்கப் பயில்வுகளாகிய இவ் அழுகையாற்றான் “ஆக்கையின் உறு பொருள்” ஆகிய திருவடி அவ் வாக்கையுட் காணப்படும்.

இத் திருவடியாகிய அமல நாதங்களே —நன்மணி நாதமே உடலுயிரை அமல மாக்குவது.

இவ் அமல வடிவமே அருளாய் வெளியாய் ஞானாகாசத்தில் ஒடுங்குவது.

இது பற்றியே,

“நமச்சிவாய என்று அழுவார்க்கு இரு விசும்பில் இருக்கலாமே”

என்று கூறப்பட்டது.

உறவினர் முதலிய நாம ரூபங்கள் எல்லாம்—தன்னிலை முன்னிலையாகிய

புறத் தோற்றம் யாவும் மாயை வடிவமே—வெளி மயக்கே என உணர்ந்து குருவருளால் வாய்மையான அழுகை என்னும் சாதகத்தைக் கைக்கொள்பவரே மாயா சம்பந்தம் நீங்கி-பாசங்கள் பற்றுக்கள் நீங்கி உய்தியடைவார் என இவ் அழுகையையே முக்கிய சாதனம் என்று எமது அப்பர் அருளியதும் அறிக.

அன்றி, முன்னிலைகளை வெறுத்து ஒருபால் ஒதுங்கி "கடவுளே துணை" என்று கூப்பாடு போடுதல் போல "நமச்சிவாய" என்று வாளா உருப் போட்டுக் கொண்டு நீலிக் கண்ணீர் வடித்து வீற்றிருத்தலால் எம் பெருமான் திருவடி கண்டு அமலம் சித்திக்கப் பெற்று ஞானாகாசத்தில் மிகச் சுலபமாக ஒடுங்கி முத்தியடைந்து விடலாம் என்று அமல வடிவோடு அருளாய் வெளியாய் மறைந்த எமது குரு மூர்த்திகளாகிய அப்பர் கூறத் துணிந்தவர் ஆவரோ? இல்லை. இல்லை. இல்லை. ஏன்?

முன்னிலைகளை வெறுத்து ஒருபால் ஒதுங்கிக் கண்ணீர் வடித்துக் கூப்பாடுகள் போடுவோர்—உருப் போடுவோர் இவையே முக்கிய சாதனம் என அமைவோர் புருஷார்த்தங்களை அடைய முடியாது சரீரம் பிணமாகி விழ மாண்டு போதல்—மாயை வலைப்பட்டு---விதி வசப் பட்டு அசேதனத்துவம் அடைதல் கண்கூடு ஆதலால் என்க.

களவொழுக்கப் பயில்வுகளாகிய அழுகை யாற்றான் எம் பெருமான் திருவடி காணப்பட்டது — உணர்வு எனும் பெரும் பதம் தெரியப் பட்டது என்பதனைப் பின் வரும் திருமங்கையாழ்வார் அநுபவத் திருவாக்கும் நன்று வலியுறுத்துதல் காண்க.

## திருவாய்மொழி.

வாடினேன்வாடிவருந்தினேன்மனத்தால்
[பெருந்துயரிடும்பையிற்பிறந்து
கூடினேன்கூடியிளையவர்தம்மோடவர்
[தருங்கலவியேகருதி
ஓடினேனோடிஉய்வதோர்பொருளால்
[உணர்வெனும்பெரும்பதம்தெரிந்து
நாடினேன்நாடிநான்கண்டுகொண்டேன்
[நாராயணாஎன்னுநாமம்.

["நாராயணா என்னும் நாமம்" என்பது "எந்தையார் திரு நாமம் நமச்சிவாய" என்னும் பொருளுடையது.]

வாய்மையான அழுகை என்னும் களவொழுக்கத்தால் அமலம் சித்திக்கப் பெற வேண்டும் என்று பின் வரும் பாசுரத்தால் அப்பர் இரங்கிக் கூறி யருளியதும் அறிக.

## அப்பர் தேவாரம்.

விளைவறியாமையாலேவேதனைக்கடலு
[ளாழ்ந்து
களைகணுமில்லேனெந்தாய்காமரங்
[கற்றுமில்லேன்
தளையவிழ்கோதைமாதர்தங்களோடின்ப
[மேய்த
இளையனுமல்லேனெந்தாய்என்செய்வான்
[றோன்றினேனே.

(ஷை குறைந்த திருநேரிசை பாசுரம். 9)

[விளைவு — அமல விளைவு. உடல் அசுத்தம் நீங்கி அமலமாக விளைவேறுதல். காமரம் --மதனாகமம்.]

மகளிர் போகமாகிய அழுகையே அமல ஒளி ஆக்க முறுதற்குரிய சாதனம் --நரை திரை முதலிய ஊனம் நீங்கி நித்தியத்துவம் பெறுதற் குரிய சாதனம் என்பதனைப் பின் வரும் பிரபல சுருதிகளும் நன்று வலியுறுத்துதல் காண்க.

## திருமந்திரம்.

பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி
அயனொடு மாலறி யாவகை நின்றிட்(டு)
உயர்நெறி யாய்ஒளி ஒன்றதுவாமே.

(ஷை 9-ம்தந். ஆகாசப்பேறு மந்.4)

## ஞானசம்பந்தர் தேவாரம்.

தரைமுதலுலகினில்உயிர்புணர்தகைமிக
விரைமலிகுழலுமையொடுவிரவதுசெய்து
நரைதிரைகெடுதகவதுவருளின்னெழில்
வரைதிகழ்மதில்வலிவலமுறையிறையே.

(ஷை திருவலிவலம்-பண்-வியாழக்குறிஞ்சி.
[பாசு.-6.)

இன்னும், நிறை முறையான மகளிர் போகமே "பஞ்சம ஆகுதி" என ஐதரேயம் முறை யிடுதலானும், ஆகமங்களில் "ம்ருத தீக்ஷை" கூறப் படுதலானும், களவொழுக்கப் பயில்வாகிய வாய்மையான அழுகை என்பது,

"மறை நவல் தோன்மொழி"

ஆதல் நன்று வலியுறுதல் காண்க.

இவ் உண்மை தத்துவப் பெரியார் அருளிய மறைகளில் பரக்கக் காணப்படும்.

இத்தகைய வாய்மையான அழுகை யாற்றான் அமல முதற்படி யாகிய இருவினையொப்பு மல பரிபாகம் சத்தி நிபாதம் என்பன கைகூடிக் காமாட்சி பீடம் சித்திக்கும்.

"ஆசைப்பேறு" என்னும்தடத்தை அடைந்தவன் பெட்பு இதுவே ஆம். இதனாற்றான் "ஒழிபு" என்னும் நிலைமை கைகூடப் பெறும்.

இத்தகைய அழுகையால் அன்றி வேறு தடம் புகுந்து சாதலடைந்த பின் முத்தி வாயில் காணலாம் என்பது பித்தன் பிதற் றுரையே ஆம்:

அழுகை என்னும் களவொழுக்கப் பயில்வால் காமம் ஆட்சி பெற்ற தடமாகிய அமல முதற் படியை அடைந்தவனே பஞ்ச பூதப் பயில்வுகளை உஞற்ற அருகன்;

தன்னுடைய மாத்திரைகளை -- பஞ்ச பூத பஞ்சீகரணத்தால் கரு உருவாகிய தன் கருவின் தன்மையை — பெட்பை --மாத்திரைகளை --நிறையை அறிந்தவன் ஆகின்றான்; தன்னைத் தானே அறிந்தவன் ஆகின்றான்.

இவன்தன் நிறையை அறிந்தவனாதலால், தானன்றி முன்னிலை இல்லை என அறிந்தவனாதலால் முன்னிலையாகிய பஞ்ச பூதங்களை எவ் எவ்வாறு ஆக்க வேண்டும் என எண்ணினும் அவ் அவ்வாறே ஆக்கும் ஆற்றல் வாய்ந்தவனாவன்.

உலக மெல்லாம் இவனுக்கு அமைடியே. வாய்மையான புருஷார்த்தங்களை அடைபவன் --வீடு பேறடைபவன் இவனே ஆவன்.

இத்தகைய வாய்மையான அழுகை நிவிர்த்தி நெறிக்கு இயற்கை முறையான் அமைந்த இன்றியமையாச் சாதனம் என வற்புறுத்துபவராய்.

"அழுகையும் இயலவே"

என இச் சூக்தத்துக்கு முற்றுத் தந்தனர் ஆசிரியர் என அறிக. மேலும் விரிப்பிற் பெருகும்.

இதுகாறும் கூறியவைகளால் மூவடி முப்பது என்னும் அரிய பெரிய தமிழ் மறையில் "ஒழிபு" என்னும் நான்காம் அத்தியாயத்தில் மூன்றும் சூக்த மகுடமாகிய "அழுகை" என்பதன் பண்பும் பயனும் ஷை சூக்தம் நுதலிய வாற்றான் ஒருவாறு உணரத்தகும். சுபம்.

Imprimerie "VITTAGAM" — Pondichéry. Le Directeur-Gérant. R Nagarattinam.